முருகப்பெருமான் துணை

**மகான் புண்ணாக்கீசர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.12.2022**, வியாழக்கிழமை

1. ஞானத்தலைவன் ஆசி பெற்ற
ஞானிகள் படையை அமைக்க
ஞானபண்டிதன் வழிபாடுதனை
நாடெங்கிலும் முதன்மையாக்கி அருளும்
2. அருளும் ஆறுமுக அரங்கனே
அய்யனே உன் பெருமை கூறி
அருளென அனுகூல ஆசிதனை
அறிவிப்பேன் சுபகிருது சிலை திங்கள்
3. திங்களிலே முன்னான்கீர்திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 14 ம் நாள் 29.12.2022, வியாழக்கிழமை)
தேசிகன் கேட்க புண்ணாக்கீசர் யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓம் என்ற பிரணவ நாதம் எங்கும்
4. எங்கும் சக்தியாகப் பரவ
யுகத்தின் இடரான நிலை யாவும்
ஓங்கார நாதத்தால் அகலும்
உண்மை அமைதி பக்குவம் பெருகி
5. பெருகி உலக மக்களிடையே
பெருந் தெளிவும் காணும்
அருந்தவசி அரங்கன் தவம்
அளவிலா சக்தியாக அனுகி
6. அனுகியே மக்களிடை மாற்றம்
அளித்திடும் முழுமை தரும்படி
ஞானவான்களாக மக்கள் உயர
நம்பிக்கை தந்து காத்திடும்
7. காத்திடும் சர்வ வேலியுமாக
காத்திடும் தீவினை பற்றா
உத்தம நற்குண மாந்தர்களாக
உலகையே மாற்றும் சக்தி மிக்கவர்களாக
8. ஆகவே தேற்றம் தந்துமே
அற்புதம் நிகழ்த்தும் இனி
வகைபட ஞானியர் படை
வலம் வந்து அரங்கனுள்
9. உள்ளிருந்து அவரவர் பிறவி
உயர்மக்களை தேர்வு செய்து
வல்லமை மிக்க பிரணவக்குடிலுக்கு
வரச்செய்து சரணடைவுதனை

10. தன்னையே நிகழ்த்தி வர
தப்பாமல் இனி கலியிடர்
மண்ணுலகை விட்டு விலகி
மக்களெல்லாம் அமைதி நிறைவு

11. நிறைவு நிம்மதியுடன் தெளிவு
நிலவுலகில் அடைவது உறுதி
குறைவிலா குருமார்க்கம் தனை
குவலயத்தார் அறிந்து இணைய சடுதி நலம்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–